**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 459/2024**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேஸ்வரி | தாலுகா | : | ஆழ்வார்க்குறிச்சி |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆழ்வார்க்குறிச்சி | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆழ்வார்க்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி பேச்சிமுத்துவை எனக்கு தெரியும். ஆழ்வார்க்குறிச்சி பெரம்பூரில் நான் ஒரு காலியிடம் வாங்கியுள்ளேன். அந்த இடம் சம்பந்தமாக எதிரிக்கும், எங்களுக்கும் பிரச்சனை இருந்தது. 02.04.2023 அன்று நான் வயல் அறுவடை செய்ய ஒரு நபரை அழைக்க சென்றிருந்தேன். அம்மன்கோவில் அருகே எதிரி என்னை வழிமறித்தார். என்னை திட்டினார். எதிரி மறைத்து வைத்திருந்த அரிவாளால் என்னை வெட்டினார். என்னுடைய வலது தோள்பட்டையில் அந்த வெட்டு பட்டு, காயமானது.

மீண்டும் எதிரி வெட்டியபோது, என்னுடைய வலது கையில் பட்டு காயம் ஏற்பட்டது. எதிரி என்னுடைய தோள்பட்டையில் 3 வெட்டுக்கள் வெட்டினார். என்னுடைய வலது கை மணிக்கட்டிற்கு கீழ்பகுதியிலும் எதிரி வெட்டினார். எதிரி மீண்டும் தலையில் வெட்டினார். தலையில் பல

இடங்களில் காயம் பட்டது. சம்பவம் நடந்தபோது, மதியம் 03.00 மணிக்கு மேல் இருக்கும். எனக்கு இரத்தப்போக்கு ஏற்பட்டு விழுந்து விட்டேன். தேவடியா மவளே என்று அசிங்கமாக பேசிக்கொண்டே வெட்டினார். நான் சத்தம் போட்டதை கேட்டு சந்திரா, இந்திரா ஆகியோர்கள் வந்தார்கள். அவர்கள் வந்து என் மகளுக்கு தகவல் சொன்னார்கள். ஆட்கள் வந்தவுடன் எதிரி ஓடி விட்டார்.

என்னை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு 11 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். அவர்களிடம் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:25:16 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 459/2024</u>
<u>வழக்கு சாட்சி PW-2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துகிருஷ்ணவேணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஈஸ்வரன் | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | கீழக்கலங்கல் | வயது | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழக்கலங்கலில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்புகளை கவனித்து வருகிறேன். எதிரி பேச்சிமுத்துவை எனக்கு தெரியும். சாட்சி மகேஸ்வரி என்னுடைய அம்மாவாகும். 02.04.2023 அன்று என்னுடைய அம்மா வீட்டிற்கு நான் வந்திருந்தேன். என்னுடைய அம்மா வயல் அறுப்பு சம்பந்தமாக பார்க்க சென்றிருந்தார். நான் வீட்டிலிருந்தபோது, பவித்ரா என்ற சின்ன பெண் வந்து பேச்சிமுத்து என் அம்மாவை வெட்டியதாக சொன்னார். என் அம்மா முப்பிடாதி அம்மன் கோவில் அருகே வெட்டுப்பட்டு காயத்துடன் இருந்தார். என் அம்மாவிற்கு வலது கை மணிக்கட்டு, வலது கை தோள்பட்டை, வலது கை தலை ஆகிய இடங்களில் காயம் இருந்தது. தலையிலிருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. என்னுடைய அம்மாவின் காயத்தை துண்டு வைத்து கட்டி, தண்ணீர் குடிக்க வைத்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் கொண்டு வந்தேன். அங்கு 11 நாட்கள் எனது அம்மா உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அங்கு போலீசார் வந்து

விசாரித்தார்கள். நான் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:25:25 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 459/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரா | தாலுகா | : | ஆழ்வார்க்குறிச்சி |
| தந்தை பெயர் | : | சைலப்பன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆழ்வார்க்குறிச்சி | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆழ்வார்க்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரி பேச்சிமுத்துவை எனக்கு தெரியும். சாட்சி மகேஸ்வரியை எனக்கு தெரியும். 02.04.2023 அன்று பரம்பூர் அம்மன்கோவில் அருகே நானும், இந்திராவும் பேசிக்கொண்டிருந்தோம். அம்மா, அப்பா என்று சத்தம் கேட்டது. நான் திரும்பி பார்த்தபோது, பேச்சிமுத்து அரிவாள் வைத்துக்கொண்டு ஓடினார். அவர் அம்மன்கோவில் முன்னால் இருந்து தான் ஓடினார். நான் போய் பார்த்தபோது, மகேஸ்வரி இரத்தக்காயத்துடன் இருந்தார். தலையிலும், வலது கையிலும் காயம் இருந்தது. அவர் மயங்கி படுத்திருந்தார். பின்னர், அவருடைய மகள் வந்து மகேஸ்வரியை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:25:38 +0530